**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 204/ந/2025

நாள் 13.11.2025

A.S. இந்திரா,
குன்றத்தூர்,
சென்னை – 600 069 – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
குன்றத்தூர் நகராட்சி,
குன்றத்தூர். – எதிர்மனுதாரர்

சென்னை, குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, கதவு எண்.954, என்கிற முகவரியில் வசிக்கும் A.S. இந்திரா என்பவரின் 20.05.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2025 அன்று பெறப்பட்டு, 204/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, குன்றத்தூர், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, கதவு எண்.954, என்கிற முகவரியில் வசிக்கும் A.S. இந்திரா என்பவரின் 20.05.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

1) “மெட்ரோ கிராண்ட் சிட்டி எண்.956–ல் கட்டப்படும் கட்டிடமானது குன்றத்தூர் நகராட்சியால் அனுமதி பெற்று அல்லது சுயசான்றிதழ் கொடுத்து அனுமதி பெற்று கட்டிடம் கட்டி வருகிறார்களா? என்று ஐயா எனக்கு தெரியவில்லை. பில்டர் இடம் கேட்டால் கூற மறுக்கிறார்.

2) 956–ன் மனையில் கட்டும் கட்டிடமானது பக்கவாட்டிலும் பின்பக்கத்திலும் இடம் விடாமல் வீடு கட்டிவருகிறார்கள். இதனால் தீ விபத்துகள் ஏற்பட்டால் விபத்தை தடுக்க மிகவும் கடினமாக இருக்கும்.

3) கட்டிடம் கட்டும் பொழுது பொதுமக்கள் ஆபத்து கருதி கட்டிடம் சுற்றி தடுப்பு மறைவு ஏற்படுத்தப்படவில்லை.

4) இதனால் மேல்தளத்தில் வேலைபார்க்கும் பொழுது கொம்புகள் இரும்பு கருவிகள் கீழே விழுகிறது. இதனால் மிகவும் அச்சமாக உள்ளது.

5) கட்டிடத்தில் வரும் கலவைகள், சாம்பல் புகைகள் போன்றவை அதிகமாக வெளிவருகிறது. ஐயா இதனை சுவாசிக்கும் போது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

6) கட்டிடத்தில் 15–க்கும் மேற்பட்டவர்கள் இரவு நேரங்களில் தங்கி வேலை பார்க்கிறார்கள். இரவு 11 மணிக்கும் அதிகாலையில் எழுந்து வேலை செய்கிறார்கள். ஐயா வேலை செய்பவர்கள் அனைவரும் காலை கடன்களை (கழிவு) சுற்றியுள்ள இடங்களில் போவதால் மிகவும் சிரமமாக உள்ளது.

7) 11.04.2022 அன்று 957–ன் மனையின் உரிமையாளர் திருமதி. R.சுதா S. ரமேஷ் பாபு அவர்களின் வீட்டில் தீ விபத்து நடந்தது. ஐயா இந்த வீட்டை ஒட்டி கட்டும் 956–ன் மனையின் கட்டிடத்தின் பக்கவாட்டில் சுவர்களை இடிக்கும் கருவிகளை கொண்டு 15 நாட்களாக துளைகளை போட்டார்கள். இருந்தும் இடம் விடவில்லை.

8) கட்டிடத்தை இடிக்கும் கருவிகளை கொண்டு இடித்ததால் கட்டிடத்தின் வலிமைதன்மை குறைந்திருக்கும்.

9) கட்டிடத்தின் பக்கவாட்டில் பூசவும் கூட முடியாது.

10) கடந்த 11.04.2025 அன்று மின் அஞ்சல் மூலமாக 957 –ன் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தை பற்றியும் 13.05.2025 அன்று 956–ன் கட்டிடத்தின் விதிமீறல் பற்றியும் புகார் தெரிவித்திருந்தேன்.

எனவே, ஐயா அவர்கள் 956–ன் கட்டிட அனுமதி மற்றும் வரைபடம் தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்தும் கட்டிடத்தின் தன்மைகளையும் ஆராய்ந்தும் புகார்மனுக்கள் தந்தாலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நகராட்சி அலுவலர்கள் மீதும், கட்டிடத்தின் உரிமையாளர் மீதும் கட்டிடம் கட்டும் பில்டர் மீதும், தக்க நடவடிக்கை எடுத்திடவும் கட்டிடம் ஆய்வு செய்யும் வரை ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தின் அய்யா அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அய்யா இம்முறைமன்றத்தில் தரும் தீர்ப்பை நகராட்சி துறை பின்பற்ற மறுக்கிறது. ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் வரை நீதியை தேடி போராடியுள்ளேன். ஆகையால் அய்யா அவர்கள் விதிமீறிய கட்டிடங்களுக்கு அதிகபடியான தண்டனை வழங்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்".

2) மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் குன்றத்தூர் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) குன்றத்தூர் நகராட்சி ஆணையர் அவர்களின் 12.08.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரரின் புகார் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திடமிருந்து 23.06.2025 தேதியில் கடிதம் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர் / ஊரமைப்பு சட்டம், 1971-ன் படி குன்றத்தூர் கிராமம், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, மனை எண். 956ல் கட்டப்படும் கட்டிடம் தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி திருமதி கிருத்திகா என்பவருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க. எண். 2212/2025/எப்1, நாள் 18.7.2025ன் படி படிவம் I வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமதி கிருத்திகா என்பவரால் மேற்காணும் கட்டிடம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட பத்திர நகல், பட்டா நகல், வில்லங்க சான்று, கட்டிட வரைப்பட அனுமதி நகல் ஆகியவை 08.08.2025ம் தேதியில் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 11.08.2025 அன்று புகார் தொடர்பான கட்டிடம் நகரமைப்பு ஆய்வாளர் (கூ.பொ) அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம், கட்டிட வரைபட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது. எனவே தமிழ்நாடு நகர் / ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி மேற்படி கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது'' எனத்தெரிவித்துள்ளார்.

4) இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 20.08.2025 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 08.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் A.S.இந்திரா என்பவர் 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ளவில்லை.

6)குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர்(கூடுதல் பொறுப்பு) 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்:-

"குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் கிராமம், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, மனை எண்.956–ல் விதிமுறைகளை மீறியும் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்திலும் திருமதி.கிருத்திகா என்பவரால் கட்டிடம் கட்டப்படுவதாக திருமதி.A.S.இந்திரா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி குன்றத்தூர் கிராமம், கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, மனை எண்.956–ல் கட்டப்படும் கட்டிடம் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி திருமதி.கிருத்திகா என்பவருக்கு 18.07.2025ல் படிவம் I வழங்கப்பட்டதைத் தொடர்ந்து திருமதி.கிருத்திகா என்பவரால் மேற்காணும் கட்டிடம் தொடர்பான பத்திர நகல்,

பட்டா நகல், வில்லங்க சான்று, கட்டிட வரைபட அனுமதி நகல் ஆகியவைகளை 08.08.2025 அன்று நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து 11.08.2025 அன்று புகார் தொடர்பான கட்டிடம் என்னால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம் கட்டிட வரைபட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது. எனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி, தொடர் நடவடிக்கைகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத்தெரிவித்துள்ளார்.

7) குன்றத்தூர் நகராட்சி ஆணையர் அவர்களின் 23.09.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க கோரி தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்றத்திடமிருந்து 23.06.2025ம் தேதியில் கடிதம் வரப்பெற்றது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு நகர் / ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி குன்றத்தூர் கிராமம், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, மனை எண்.956–ல் கட்டப்படும் கட்டிடம் தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி திருமதி. கிருத்திகா என்பவருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2212/2025/எப்1 நாள் 18.07.2025–ன்படி படிவம் I வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமதி. கே. கிருத்திகா என்பவரால் மேற்காணும் கட்டிடம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட பத்திர நகல் பட்டா நகல் வில்லங்க சான்று கட்டிட வரைபட அனுமதி நகல் ஆகியவை 08.08.2025ம் தேதியில் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 11.08.2025 அன்று புகார் தொடர்பான கட்டிடம் நகரமைப்பு ஆய்வாளர் (கூ.பொ) அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம் கட்டிட வரைபட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது என அறிக்கை அளிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு நகர் / ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56(1)ன்படி திருமதி. கிருத்திகா என்பவருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2212/2025/எப்1 நாள் 21.08.2025–ன்படி படிவம் IV வழங்கப்பட்டது.

இதற்கு திருமதி. கே. கிருத்திகா என்பவரால் பின்வருமாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

It is submitted that as per CMDA approved Layout No.PPD /LO.No.15/2017 in file No.L1/13855/2016 dated 06.06.2017 the Plot No.956 is Economically Weaker Section (EWS) Plot size is 19.9 " x 32.9" extent is 647 Sq.ft. As per TNCDBR 2019 rule No.35(a) for EWS Plots required Side set back both side and Rear side is Nil.

Further, I submit that this house is only for living our family not for Sale, Lease, Rent or any other Commercial purpose. The petitioner is not doing any Social service they are simply threatening us and demanding money is only their motivation.

Hence, I request your goodself kindly drop further action on the Form IV dated 21.08.2025 issued by Kundrathur Municipality and petitioners complaint dated 20.06.2025.

மேற்காண் விளக்கம் **17.09.2025** அன்று இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. கூடுதல் பொறுப்பு அலுவலர் எவரும் இல்லை. எனவே மனுதாரரது கோரிக்கை தொடர்பாக நகரமைப்பு பிரிவு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்ட பின்னர் இப்பொருள் தொடர்பாக இறுதி முடிவு எடுக்க இயலும் என்பதை இதன்மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" எனத்தெரிவித்துள்ளார்.

**8)** மனுதாரர் A.S. இந்திரா என்பவர் தனது **25.08.2025** நாளிட்ட கடிதத்தில் தனக்கு அழைப்பாணை கிடைக்கப்பெறாததால் **20.08.2025** அன்று நடைபெற்ற விசாரணைக்கு தன்னால் ஆஜராக இயலவில்லை எனதெரிவித்துள்ளதைத் தொடர்ந்து முறைமன்ற நடுவர் இவ்வழக்கினை **23.09.2025–ல்** மீண்டும் நடத்த முடிவு செய்து விசாரணைக்கு ஆஜராகுமாறு மனதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் **15.09.2025** அன்று அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**9) 23.09.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திருமதி. A.S. இந்திரா இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"**956–ன்** மனையில் கட்டும் கட்டிடமானது பக்கவாட்டிலும் பின்பக்கத்திலும் இடம் விடாமல் வீடு கட்டிவருகிறார்கள். இதனால் தீ விபத்துகள் ஏற்பட்டால் விபத்தை தடுக்க மிகவும் கடினமாக இருக்கும்.

கட்டிடம் கட்டும் பொழுது பொதுமக்கள் பாதுகாப்பு கருதி கட்டிடத்தை சுற்றி தடுப்பு மறைவு ஏற்படுத்தபடவில்லை. இதனால் மேல்தளத்தில் வேலைபார்க்கும் பொழுது கொம்புகள் இரும்பு கருவிகள் கீழே விழுந்து மற்றும் சாம்பல் புகை அதிகமாக வெளிவந்தது. அதனால் இருமலில் பாதிக்கப்பட்டோம்.

கட்டிடத்தில் வரும் கலவைகள், சாம்பல் புகைகள் போன்றவை அதிகமாக வெளிவருவதால், சுவாசிக்கும் போது உடல் நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது.

கட்டிடத்தில் **15–க்கும்** மேற்பட்டவர்கள் இரவு நேரங்களில் தங்கி வேலை பார்க்கின்றார்கள். இரவு 11 மணிக்கும் அதிகாலையில் எழுந்து வேலை செய்கிறார்கள். வேலை செய்பவர்கள் அனைவரும் காலை கடன்களை சுற்றியுள்ள இடங்களில் கழிப்பதால் சுற்று சூழல் பாதிப்படைந்துள்ளது. என் வீட்டின் முன் நின்று சிறுநீர் கழித்தார்கள்.

**11.04.2022** அன்று **957–ன்** மனையின் உரிமையாளர் திருமதி. R.சுதா S. ரமேஷ் பாபு அவர்களின் வீட்டில் தீ விபத்து நடந்தது. அவரும் செட்பேக் விடவில்லை. இந்த வீட்டை ஒட்டி உள்ள **956** கட்டும் அவருடைய காலத்தின் பெடல் **956–ன்** மனையின் இருந்ததால், **956**ன் மனை ஒட்ட கட்டப்பட்டது. பிறகு தீவிபத்து ஏற்பட்டதால் துளையிடப்பட்டது. கட்டிடத்தின் பக்கவாட்டின் சுவர்களை இடிக்கும் கருவிகளை கொண்டு **15** நாட்களாக துளைகளை போட்டார்கள்.

கடந்த 11.04.2025 அன்று 957 –ன் வீட்டின் ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் 13.05.2025 956–ன் கட்டிடத்தின் விதிமீறல் பற்றியும் புகார் தெரிவித்திருந்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் மெட்ரோ கிராண்ட் சிட்டியில் உள்ள, 957, 407, shop-3. 110, shop-7 இந்த மனை எண்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கவும், 956–ன் கட்டிட அனுமதி மற்றும் வரைபடம் தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்தும் கட்டிடத்தின் தன்மைகளையும் ஆராய்ந்தும் புகார்மனுக்கள் தந்தாலும் கட்டிடம் கட்டும் பணி முடிந்த பின்னரும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே நடவடிக்கை எடுக்காத நகராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திட மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அய்யா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத்தெரிவித்துள்ளார்.

10) எதிர்மனுதாரராகிய குன்றத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 23.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்:–

"குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் கிராமம், மெட்ரோ கிராண்ட் சிட்டி லோட்டஸ் தெரு, மனை எண்.956–ல் விதிமுறைகளை மீறியும் மற்றும் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் விதத்திலும் திருமதி. கிருத்திகா என்பவரால் கட்டிடம் கட்டப்படுவதாக திருமதி. A.S. இந்திரா என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் புகார் தெரிவித்துள்ளார்.

திருமதி. கிருத்திகா என்பவரால் மேற்காணும் கட்டிடம் தொடர்பாக பத்திர பதிவு செய்யப்பட்ட பத்திர நகல், பட்டா நகல், வில்லங்க சான்று, கட்டிட வரைபட அனுமதி நகல் ஆகியவை 08.08.2025ம் தேதியில் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புகார் தொடர்பான கட்டிடம் 11.08.2025 அன்று நகரமைப்பு ஆய்வாளர் (கூ.பொ) அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம் கட்டிட வரைபட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது என அறிக்கை பெறப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56(1)ன்படி கட்டிட உரிமையாளர் திருமதி.கிருத்திகா என்பவருக்கு இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். 2212/2025/எப்1 நாள் 21.08.2025–ன்படி படிவம்–IV அறிவிப்பு வழங்கப்பட்டது. இதற்கு திருமதி. கிருத்திகா என்பவர் தனது 17.09.2025 தேதியிட்ட பதிலில் தனது மனை Economically weaker section (EWS) மனை எனவும், 647 சதுர அடி மனை என்பதால், side set back மற்றும் rear side set back தேவையில்லை என குறிப்பிட்டுள்ளார். ஆனால் திருமதி. கிருத்திகா என்பவரால் பெறப்பட்ட கட்டிட உரிமத்தில் front, back and rear set back காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56(1)ன்படி மேற்படி கட்டிடத்தின் மீது தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் குடியிருப்பு குறித்து திரு.வினோத்குமார் என்பவர் நகர்ப்புற வீட்டுவசதித்துறை செயலர் அவர்களுக்கு அளித்த புகார் மனுவின் அடிப்படையில் நகராட்சி ஆணையர், வட்டாட்சியருக்கு கடிதம் அளித்து அந்த கடிதத்தின் பேரில் நகர் சார் ஆய்வாளர் மற்றும்

நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களால் மனுதாரரின் கட்டிடம் அளவீடு செய்யப்பட்டதில், திரு.வினோத்குமார் என்பவரின் இடத்தில் மனுதாரர்ஒரு அடி ஆக்கிரமித்திருப்பதாக அறிக்கை அளித்துள்ளார் என்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள கட்டடம், கட்டுமானப்பணி முடிக்கப்பட்டு விட்டதால் கட்டிட கழிவுகள் தூசுகள் ஏதும் தற்போது ஏற்படவில்லை என்ற விவரத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

11) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர்(கூடுதல் பொறுப்பு) மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள், தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி, மெட்ரோ கிராண்ட் சிட்டி, மனை எண்.956–ன் உரிமையாளர் திருமதி.கிருத்திகாவின் தந்தையானவர் (பெயர் தெரியவில்லை) மூன்று அடுக்கு மாடி கட்டிடம் கட்டி வருகிறார் எனவும், CMDA விதிமுறைகளைப் பற்றி தெரிந்தும் விதிமுறைகளை மீறி, பக்கவாட்டிலும், பின்பக்கத்திலும் இடம் விடாமல் வீடு கட்டி வருகின்றனர் எனவும், இதனால் தீ விபத்துக்கள் ஏற்பட்டால் விபத்தை தடுப்பது மிகவும் கடினமாக இருக்கும் எனவும், கட்டிடம் கட்டும்பொழுது பொதுமக்கள் ஆபத்து கருதி கட்டிடம் சுற்றி தடுப்பு மறைவு ஏற்படுத்தவில்லை எனவும், விதிகளை மீறி கட்டிடம் கட்டுகிறார் என பல முறை தெரிவித்தும் அதை பொருட்படுத்தவில்லை எனவும், மின்னஞ்சல் மூலம் நகராட்சிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை எனவும் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி குன்றத்தூர் கிராமம், மெட்ரோ கிராண்ட் சிட்டி, லோட்டஸ் தெரு, மனை எண்.956ல் கட்டப்படும் கட்டிடம் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி திருமதி.கிருத்திகா என்பவருக்கு நகராட்சி கடிதம் ந.க.எண்.2212/2025/எப்1 நாள் 18.07.2025ல் படிவம் I வழங்கப்பட்டதை தொடர்ந்து, திருமதி.கிருத்திகா என்பவரால் மேற்காணும் கட்டிடம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட பத்திர நகல், பட்டா நகல், வில்லங்க சான்று, கட்டிட வரைபட அனுமதி நகல் ஆகியவை 08.08.2025ம் தேதியில் நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், அதனைத் தொடர்ந்து 11.08.2025 அன்று புகார் தொடர்பான கட்டிடம் நகரமைப்பு ஆய்வாளர் (பொ) அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம் வரைபட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டு வருகிறது என்பதும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி மேற்படி கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும் குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகரமைப்பு ஆய்வாளர் (கூபொ) வாக்குமூலம், மற்றும் நகராட்சி ஆணையர், இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

12) இந்நேர்வில் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு நகராட்சி ஆணையர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, தமிழ்நாடு நகர்

மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 –ன் கீழ் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் இந்த நடவடிக்கை தொடர்பான அறிக்கையினை 3 மாதங்களுக்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்ப குன்றத்தூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. A.S. இந்திரா,
   W/o. அசோக்குமார்,
   எண்.954, லோட்டஸ் தெரு,
   மெட்ரோ கிரண்ட் சிட்டி,
   குன்றத்தூர்,
   சென்னை – 600 069

2. நகராட்சி ஆணையர்,
   குன்றத்தூர் நகராட்சி,
   குன்றத்தூர், சென்னை.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/11/25
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032